# யமுனாதீரனின் பல்லுரை

## பகவத்கீதையின் சாரம்



சி. யமுனாநந்தா.

# நூன்முகம்

பகவத்கீதையில் கூறப்பட்டுள்ள மறைமொழியை மெய்யுணர்ந்து கற்றல் சாலச் சிறந்தது. தெய்வமொழியாகிய சமஸ்கிருதத்திலும் தமிழிலும் இதனைக் கற்றுணர்தல் ஆத்மஞானத்தைத் தரும். பரமாத்மா பற்றிய மெய்யுணர்வு ஏற்படும். ஆத்மா பரமாத்மா சர்வ வியாபகத்தன்மையினை கீதையின் சுலோகங்களில் விளங்க வைக்கலாம். இற்றை இயற்பியல் கண்டுபிடிப்புக்கள் பரமாத்மாவின் பிரகிருதியில் ஓர் சிறு பகுதியாகவே அமைகின்றது. தமிழில் சாராம்சமாக அமைந்துள்ள இந்நூல் மெய்ஞானத்திற்கு மட்டுமன்றி சாதாரண வாழ்வியல் கர்மங்களை நிறைவேற்றுவதற்கான வழிகாட்டியாக அமையும். கர்மம், விகர்மம், அகர்மம் என்பனவே இயற்கை வாழ்வின் அம்சங்கள் என்பதனையும் அவற்றின் பயனை யாண்டும் அனுபவிப்போம் என்றும் கிருஸ்ணபகவானின் அருளுரைகளை நாம் போற்றி கர்மயோகத்தில் வழுவாது வாழ்ந்துறுவோம்.

**சி. யமுனாநந்தா.**

## சமர்ப்பணம்

அம்மாவிற்கு

பராசக்தி சிவநாதன்

# யமுனாதீரனின் பல்லுரை

## பொருளடக்கம்


| அத்தியாயம் | சுலோகங்கள் |
|---|---|
| **1. அர்ஜுன விஷாதயோகம்** | **47** |
| **2. பிரம்மவித்தை** | **72** |
| **3. கர்மயோகம்** | **43** |
| **4. ஞான கர்மயோகம்** | **42** |
| **5. சந்நியாச யோகம்** | **29** |
| **6. தியான யோகம்** | **47** |
| **7. ஞான விக்ஞானயோகம்** | **30** |
| **8. அக்ஷரம் ரஹ்மயோகம்** | **28** |
| **9. ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்** | **34** |
| **10. விபூதி யோகம்** | **42** |
| **11. விஸ்வரூபதர்சன யோகம்** | **55** |
| **12. பக்தி யோகம்** | **20** |
| **13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாவ யோகம்** | **34** |
| **14. குணத்ரய விபாவ யோகம்** | **27** |
| **15. புரு ஷோத்தம யோகம்** | **20** |
| **16. தெய்வஸுர ஸம்பத விபாக யோகம்** | **24** |
| **17. சிரத்தாத்ரய விபாக யோகம்** | **28** |
| **18. மோக்ஷஸந்யாஸ யோகம்** | **78** |

# பகவத்கீதை சாரம்

# யமுனாதீரனின் பல்லுரை

## 1. அர்ஜுன விஷாதயோகம்

### திருதராஷ்டிரது வினவல்

1. தர்மத்தில் யுத்தம் யாதோ நம்மர்
2. சஞ்ஜய சகபந்தம் பகை குருவை அணுகல்
3. பெரும் படைஎதிர் பாரீர்
4. எதிரில் சூரர்களை காண்பீர்
5. எதிரில் மகாராஜாக்கள் காண்பீர்
6. எதிரில் மகாரதர்கள் காண்பீர்
7. நமர் சிறந்தவர் காண்பீர்
8. வெற்றியே வடிவினர் யாங்கள்
9. உயிரிலும் மேலா வீரர்நமர்
10. நமது பரந்தது மற்று சிறியது
11. அவர் அவர் இடங்களில் நிற்பீர்கள்
12. சிம்மநாதத்துடன் முழங்கிய சங்கு
13. பேரிகைகள், தம்பட்டங்கள், பறைகள், கொம்புகள் பேரொலியாகியது
14. வெண்புரவித் தேரில் தெய்வீக சங்கொலி
15. பாஞ்சஜன்யம் தேவதத்தம், பௌண்டரம் சங்கொலிகள் தொடர்ந்தன
16. அனந்தவிஜயம் சங்கொலி மணிபுஷ்பகௌ சங்கொலி
17. விற்படை வீரர்
18. தனித்தனி சங்கு ஊதினர்
19. பெருமுழக்கம் விண்ணையும் மண்ணையும் சேர்த்தொலித்தது
20. வில்லை ஏற்றிச் சொல்லை உரைத்தல்
21. படைகளிற்கு இடையே தேரை நிறுத்தல்
22. கர்மத்திற் கர்மம்
23. புல்லரிவுக்கு பிரீதி காணல்
24. இரு சேனைகளின் மத்தியில் குரு
25. சேனைகளில் உறவு
26. சேனையில் நம்மவர்
27. நம்மவர் மேல் பேரிரக்கம் வரல்
28. அதர்மம் மேலோங்கல்
29. காண்டீவம் நழுவுதல்
30. மனம் தளர்கிறது

31. நன்மையில் போர் வேண்டிலேன்
32. இராஜ்ஜியத்தால் ஆவதில்லை
33. போகத்தால் ஆவதில்லை
34. ஜீவித்தத்தால் ஆவதில்லை
35. நான் அழியினும் மூவுலகத்தைப் பெரினும் கொல்லேன் அல்லேன்
36. கொல் இன்பம் இல்லை பாவமே
37. சுற்றம் உற்றம் கொல் ஆகா
38. ஆசைமிகுதி அறிவு இழப்பு மித்திரதுரோகம் குலநாசம்
39. கேடு உணர்த்தும் பாவம் செய்வதெங்கனம்
40. அழியும் குலம் குலதர்மம் பெருகும் அதர்மம்
41. அதர்மம் மேல் வர்ணக்கலப்பு
42. குலநாசம் நரகம்
43. குலநாசம் குலதர்மகுலைக்கும்
44. குலதர்மம் குலையின் நரகம் நெடிது
45. சுற்றம் அழித்து அரசபோகம் பாவம்
46. எதிர்க்கா என்னை கொல்லின் மிக நன்று
    எதிர்க்கா என்னைக் கொல்மின்
47. சோக அமர்வு வில்கணை களைந்து

**2. பிரம்மவித்தை**

**மதுசூதன் நவின்றல்**

1. பரிவிரக்கம் களை பார்த்தீபா இம்மை மறுமை இல
2. மோகம் உள்ளச்சோர்வு
3. அகத்தளர்வு அகல பகை விலகும்
4. உறவை அழிப்பது தகுமா கிருஸ்ணா
5. ஐயம் மேல் மேன்மை அழிதலை விடு கண்ணா
6. வென்றவர் யாவரும் மேலானவர் இல்லையே கண்ணா
7. அறநெறி அறிய சிறுமை மயங்கத் தெளிவுதா குருவே.
8. எச் செல்வம் பெறினும் துயர் தீராதா கோவிந்தா.
9. அசபையில் பார்த்தீபன் சமர் மறுத்தல்.
10. பார்த்தீப சலனத்திற்கு புன்னகையில் பதில் கோவிந்தா.
11. துயரம் அல்லீர் துயர் ஜனன மரணம் அல்ல.
12. காயங்கள் அழிந்தாலும் நாம் அழியோம்.
13. பிறப்பு வாழ்வு இறப்பு ஆத்மா நித்தியமானது
    உடல் மாறும் மயங்காதே.

14. பொறிகளில் பொருந்தும் புலன்களின் சீதம் உஸ்ணம் சுகதுக்கம் நிலையற்றவை.
15. சுகதுக்கம் சமமாக உணரல் சாகா நிலைக்குத் தகுதி.
16. இல்இல் இல்இல்இல்
17. உலகெலாம் வியாபித்தவை அழிவற்றது.
18. அழிவிலி அழியாப் பொருள்
19. அழியும் நித்தியம் அழியுமே
20. அழியும் ஆக்கை கண் அழியா ஆ!
21. பிறவா இறவா வளரா தேயா ஆ!
22. கொல்லல் அல்லல் ஆ!
23. தூலசர்ரீரப் போர்வைகள் பலப்பலலே ஆவினதே
24. ஆயுதம் அழியா நீ எரிக்கா நீர் நனைக்கா காற்று உலர்ந்தா ஆ!
25. ஆதி அந்தம் அற்ற நித்தியநிலை ஆ!
26. பொறிகடந்த மாற்றற்ற சிந்தனையில் ஆ!
27. வேதனையில் பிறந்து அழிந்தா ஆ அறா
28. பிறப்பும் இறப்பும் இறப்பும் பிறப்பும் உறுதி வருந்தாதே
29. உயிர்கள் இடையிலே தென்படும்
30. வியப்பாய் விந்தையாய் ஆச்சரியமாய் ஆறியா அமையுதே ஆ!
31. உடலில் உறை ஆ வதையில் வேதனையல்லீர்
32. அறம் மேலது உயிர் வேந்தர்க்கு
33. அறப்போர் இம்மை மறுமை திறவு
34. அறம் ஆற்றேல் பழி
35. போற்றிப் புகழ்ந்து அறம்
போற்றிப் புகழில் அறம் அழி இகழ் இழிவு
36. பெருமை சிறுமையுறும் பயம்தனில்
37. ஒன்னலர் நிந்தனை மீ துன்பம் நீயே
38. வென்றாலும் தோற்றாலும் வெற்றியென்றே உறுதிகொள்
39. பயன் கருதா கர்மம் பாவமற்றது
40. ஆத்மதத்துல அறிவு யோகபுத்தி கர்மபந்த விடுதலை ஆகும்.
41. கர்மயோகம் வீண்ணில் காப்பு
42. ஏக புக்தியதே கர்மயோகி
43. கர்மம் சுவர்க்கம் வேறில்லை.
44. அவாவுடையோர் சுவர்க்க போகிகள்.
45. போகமோகம் குறை மதியது
46. முப்பாழ் அப்பால் இருமையில்

47. பிரமஞானமே பேரானந்தம்
48. வினைப்பயன் கருதா வினையாற்று
49. பற்று அற்று கருமம் நடுவு யோகம்
50. அவாஅற மதிநிறை கருமம் கண்
51. இம்மையில் மனநடுவு யோகம்
52. நடுவு ஞானிகள் பிறவிப்பேறு நீங்கிப் பெருவாழ்வு பெறுவர்.
53. அவிவேகம் தாண்டல் பற்றற்ற நிலையாம்.
54. கலங்கா ஆத்ம ஞானம்
55. பரிபூரண ஞானி பாவனையாதோ! கேசவா!
56. ஆத்மா அவா அறுத்து திருப்தியடைதல் ஸ்திதப் பிரக்ஞன்
57. துன்ப இன்ப பற்று அச்சம் சினம் அற்ற
    உள்ளமே முனி மனன சீலமது முனி
58. பற்றில்லன் அறிவு உறுதி
59. பொறியடக்கும் நிறை ஞானம்
60. பரமாத்மா அருளில் பொறியடக்கம் அவா அறுக்கும்.
61. நல்லறிஞுனுடைய மனதையும் கொந்தளிக்கும் பொறிகள் உடைக்கும்.
62. புலனடக்கம் பரகதியடை நிறைஞானம்
63. பற்று ஆசை வெகுளியற்றது
64. வெகுளுதல் மனச்சஞ்சலம் புத்தியழிவுற மனிதன் அழிவு
    மன அடக்கம் மிக மனத் தெளிவு இறை பிரசாதம்
65. மன அமைதி துக்கம்இல அறிவு ஆத்ம சொரூபம்
66. மன அடக்கம் ஆத்ம போதம் ஆத்ம பாவனை ஆத்ம தியானம் சாந்தி
67. புலன் வழிமனம் மதியில்.
68. பொறித்தடம் புலன்மதி மேல்
69. கங்குல் பகல் யொகிக்கு
70. ஆசையொடுங்கும் சமுத்திரம் சாந்தி
71. ஆசை அறும் சாந்தி சாதகன்
72. மோகமில் பிரம்மநிலை பேறு பிரம்ம நிர்வாணம்
    பிரம்ம விந்தை.

### 3. கர்மயோகம்

1. கர்மத்திலும் ஞானம் மேலாயினும்
2. மனமுரண் களைவீர்.
3. ஞான யோகம் கர்ம யோகம் ஆத்ம சொரூபம்
4. கர்மமின்றி சித்தியில்லை
5. கணம் கணம் கர்மம் குணம்

6. பொறி அடங்கி மனதில் எண்ணல் பொய்மை
7. பொறியடக்கி பற்றற்ற கர்மம் மேலது
8. நித்திய கர்மம் நித்தியம்
9. பொதுநல கர்மம் நனிநன்று
10. யக்ஞமே காமதேனு
11. யக்ஞம் பரஸ்பரம் நன்மை
12. யக்ஞ போகம் பகிர்
13. யாகம் பாவம்தளை
14. கர்ம யக்ஞம் உயிர்கள்
15. வேதம் கர்மம் யக்ஞம் பிரமம்
16. இகச்சக்கரம் மேலது
17. ஆத்மபற்று வினையில்லது
18. ஆத்மஞானி கர்மம் அகன்றவன்
19. பற்றற்ற கர்மம் பரம்பரம்
20. கர்மம் முத்தி தரும்
21. மேலோன் வழியது உலகம்
22. அடையாததொன்று இலதாயின் கர்மம் மேலது
23. கர்மம் தவறின் உலகம் அழியும்.
24. கர்மம் இன்றேல் உலகம் அழியும்.
25. பற்றது பாமரர் பற்றன்றது பண்டிதர் கர்மம்
26. ஞானி அக்ஞானிகளிடத்து பற்றற்ற கர்மம் கருதல் ஆகாது.
27. இயற்கை தர்மசொரூபம் அகங்காரத்தால் கர்த்தா ஆகின்றது
28. ஞானிகள் ஆத்ம சைதன்யம் குணங்கள் பற்றி பற்று வைப்பதில்லை.
29. குணமோக பற்றுடையோர் கர்மம் கலைத்தல் ஆகா.
30. ஆத்ம சித்தத்தில் கர்மம் புரி.
31. கர்மயோகம் கர்மகாரிய சிரத்தை வினைநீங்கும்
32. அறநெறி தவறின் கேடு
33. உயிர்கள் இயல்தகு செயல்.
34. புலன்கள் நாட்டம் பகை.
35. சுயதர்மமே மேலது பிறர் தர்மம்
36. இச்சையின்றியும் பாவம் யாதோ! கோவிந்தா!
37. ஆசைத்தீயே எதிரி.
38. ஆசை ஆடையில் ஆத்ம சொரூபம்
39. ஞானியின் நித்திய சத்துரு ஆசை
40. பொறிபுலன் மதியிடையே மயக்கும் அவா

41. புலனடக்கம் தளைப்பட ஆசை அறும்
42. மேற்பொறி மேன் மனம் மேன் மதி ஆத்மா மேன் மேன்
43. மேன் மேன் ஆத்மா வென்றில் அவா அழி

## 4. ஞான கர்மயோகம்

1. ஞானகர்ம யோகம் இகபர வலிமையுடைய அழிவற்றது
2. ஞானகர்ம யோகம் தக்கார் கருதுவர்
3. பக்தனுக்குரியது
4. காலம் மற்ற யோகம்
5. பிறவிகள் பல அவதாரம் அறியும்
6. பிறப்பிறப்பற்றமை தனினும் ஆத்ம மாயையில் அவதாரம்
7. அறமழியின் அவதாரம் அபயம்
8. தர்மம் நிலைக்கும் அவதாரம்
9. திவ்விய அவதார உண்மை முத்தி
10. ஆசை அச்சம் குரோதம் அற்ற இறைமயமே புனிதர்
11. எவ்எவ்வழியும் அருள் வழி
12. இம்மையில் வினைப்பயன் விரையது
13. குணமும் கர்மமும் வர்ணங்கள்
14. கர்மம் கட்டுண்ணா இறை இறையறிவான்
15. கர்மம் கட
16. கர்மம் அகர்மம் கருதின் கர்மம்
17. கர்மம் விகர்மம் அகர்மம் கர்மம் கடதற்நிலை என அரிது அறி
18. காமத்தின் அகர்மம் அகர்மத்தின் கர்மம் காண் யோகி.
19. ஆசையற்றகர் மங்கள் ஞானத்தீயுற்ற பண்டிதன்
20. பற்றற்ற கர்மம் அகர்மம்
21. பற்றற்ற துறவி பாவம் அற்றான்
22. தற்செயல் பயனில் திருப்தி கர்மபந்தம் இல்லை.
23. பற்றில்லா முக்தன் ஞான கர்மம் கரைந்தது.
24. அர்ப்பணம் பிரம்மம் அக்னி ஞான யக்ஞம் நித்திய கர்மம்
25. தேவதை யாகம் பிரம்ம அக்னி ஆத்மஹோமம்
    ஜீவாத்மா பரமாத்மாவில் ஆகுதிகான் ஞானயக்ஞம்
26. அக்னி ஹோமம் இந்திரிய அடக்கம்
27. மனதை ஆத்மாவின் கண் அடக்கும் ஞான ஒளியோகத்தீயில்
    ஆகுதியில் இந்திரியகர் மங்கள் பிராண கர்மங்கள்

28. திரவிய யக்ஞம் தபோயக்ஞம் யோகயக்ஞம்
சாஸ்திரம் கற்றல் ஞானம் பெறல் யாவும் யாகம்
29. அபான பிராணம் பிராண அபானம் ஆகுதி பிராணாயாமம்
30. பிராணனின் பிராணன் யாகம் பாபம்பறவே.
31. யக்ஞ அமுதுண்ணல் அழியாப் பிரம்மம் தரும்
32. பல யாகங்களும் கர்ம வினைகளே.
33. ஞானயக்ஞம் மேலது பொருள் யக்ஞம்
கர்மம் ஞானத்தில் ஒடுங்கும்
34. பணிந்தும் கேட்டும் பணிவிடை செய்து ஞான உபதேச மூலம்
அறிவதே ஞானமே.
35. மெய்ஞானம் புகில் மயக்கம் களைந்து பசுபதி ஒன்றிய காட்சி
36. பாபிஞான தெப்பத்தில் பாபம் கடக்கும்
37. தீ விறகுகள்தனைச் சாம்பல்
ஞானத்தீ கர்மங்கள் தனைச் சாம்பல்.
38. ஞானமே மேல் தன் தன்னகத்தே யோகசித்தன்
39. சிரத்தை பரத்தைச்சாரும் புலன் வெற்றி ஞான சாந்தி.
40. அறிவிலி சிரத்தையில் ஐயமுடையில் இம்மையில் மறுமை இல்.
41. களை கர்மம் யோகம் தளை சம்சயம் ஞானம்
திளை ஆத்ம சொரூபம் திளையில் கர்மம்
42. அழி அஞ்ஞானம் ஞானவான்தனில்
வழி யோகமே.

## 5. சந்நியாச யோகம்

### கர்மயோகமே கர்ம சந்நியாசமாகிறது

1. கர்மம் துறத்தல் சாலது கர்மம் கையாளல்
2. கர்ம சந்நியாசம் சாலது கர்ம யோகம்
3. இருமைகளற்றவன் நித்திய சந்நியாசி
4. சாங்கயமும் யோகம் ஒன்றிலொன்று
5. சாங்கயர் யோகர் மெய்யர்
6. கர்மயோகம் எளிது கர்மசந்நியாசம் பிரம்மம்
7. சர்வாத்மா கர்மயோக நிஸ்டன்
8. யோகாந்தம் பொறி வழியல்லது
9. யோகாந்தம் இயல் இல்.
10. அற்றது பற்றன்று பிரமம்

அற்றது பாபபந்தம்.

11. யோககர்மம் சித்தசுத்தியது
12. யோகி நிஸ்டை சாந்தி
13. நவவாயில் நகர்தேகி அகர்ம சுகம்
14. வினை வினைவழி இயற்கை
15. அஞ்ஞான மயக்கம் தெளியின்
    பாவ புண்ணியம் அப்பால் பரமாத்மா ஞானம்
16. ஆத்ம ஞானச்சுடர் பரம் அக்ஞானம் அகழ்
17. பிரம்மஞானம் முத்தி
18. பிரம்மஞானம் சம திருஸ்டியது
19. மனத்திடம் இம்மை வெற்றி பிரமம் உறுதி
20. பிரம்மஞானி இன்பதுன்பமற்றவன்
21. புறப்பற்றற ஆத்மானந்த பிரமசமாதி
22. ஆதியந்தமுன் இந்திரிய போகம் இன்பமில்ஞானி
23. இன்பமும் துய்க்கும் யோகி
    இம்மையில் காமம் குரோதம் தவிர்த்தவன்
24. ஆத்ம இன்பம் ஆத்ம உள்ளொளி பிரம்ம நிர்வாணம்
25. பொறியடக்கி ஐயம் களைந்து தீவினை களைந்து
    பற்றில்ல உயிர் அன்புறுதல் பிரம்ம நிர்வாணம்
26. விருப்பு வெறுப்பற்ற மன அடக்கம் ஆத்மஞானம் ஜீவன் முத்தி
27. பொறியடக்கி மூச்சை அடக்கல் முனி முக்தன்
28. மனம் புத்தியடக்கம் இச்சை பயம்குரோதம் அற்ற மானசீலன் முக்தன்
29. யக்ஞம் தபசு தகமுடைய உலகனைத்து ஈசன்
    சர்வ உயிர்களின் நண்பன் யமுனாதீரதனை அறிபவன் சாந்தியடைகிறான்.

## 6. தியான யோகம்

### யோகம் சந்நியாசம் ஏகம் 1 - 9

1. கர்மம் கருதா யோகியே சந்நியாசி
2. சங்கற்பம் கலையில் சந்நியாசம்
3. கர்மம் தியான யோக சாதனம் அகர்மம் தியான சித்தியில் சாதனம்
4. பற்றற்று கருமம் கருதா சிந்தையன் யோகாரூடன்
5. ஆத்மா மேலது. நட்பும் பகையும், ஆத்மாவுக்கு ஆத்மாவே
6. தன்னுறவு தன் மேலது ஆத்மா

தன்சந்துரு தன்கீழது ஆத்மா

7. பரமாந்த சொரூப தரிசனம் மேனில் ஆத்மா

8. ஞான மேலது உறுதியில் யொகி

9. சமநலம் சமபுத்தி மேலோன்

**யோகத்திற்கு ஏற்ற சூழ்நிலைகள் 10 – 19**

10. ஒடுங்க ஒடுங்கும் யோகி தன் மனம்

11. யோகப் பிரதிஷ்டை தூய உறுதியுள் உகந்த ஆசனம்

**யோகப்பயிற்சி சுலோகம் 12 – 15.**

12. ஆசனத்தில் மன ஒடுக்கம் புலனடக்கம்
சித்தசுத்தி மேலுறும் யோகம் ஆமே.

13. நோக்கு நுனிமூக்கு திசை ஒடுங்கும்

14. அக அமைதி பயமற்று பிரம்மச்சாரிய விரதம் காத்து
இறை சித்தத்தில் யோகமர்வு

15. மனத்தியானம் உள்ளம் அடங்கி யோகி முத்தி

16. உறக்கமும் உணவும் மட்டில் யோகம்

17. உணவு உடற்பயிற்சி கர்மம், உறக்கம் விழிப்பு மிதம் யோகம் இதம்

18. ஆத்மயோக உறுதி ஆசை அகலும்கண்

19. ஆத்மதியான யோகி மனம் காற்றிலா தீப அசைவின்மைத் தகையது

20. யோகம்தனில் ஆத்மா ஆத்மாவின் கண்மகிழ்வு

21. பொறிகளுக்கு அப்பால் உணரும் ஆத்ம சொரூபத்தில்
முடிவில்லாச் சுகத்தில் யோகி

22. பெரும் துக்கத்திலும் அசையா பேரருள் பெற்றிடல்

23. துக்கத்தின் சேர்க்கையில் இருந்து பிரிதல் யோகம்.

24. சங்கல்ப ஆசை அறபொறியடக்கல் யோக சாதனம்

25. உறுதியான அறிவுடன் மன அமைதியும் இறைநோக்கு

26. சஞ்சலம் ஸ்திரமில் மனதை அலையா அடங்க ஆத்மா வசம்

27. சாந்தமனம் பாவமற்ற பக்குவம் தானே பிரம்மமான யோகிகாண் உத்தமதாம்

28. ஆத்மா பேறுடை யோகி பிரம்ம பேரானந்தம்

29. சர்வம் தன்வயம் யோக சமதிருஸ்டி தன்வயம் சர்வயம்.

30. என் என்றென்றும் காட்சியில் காட்சி என்னில் சர்வம்காண் காட்சியில்

31. எந்நிலையிலும் என்னில் யோகி எவ்வுயர் போற்றும் எம் பிரமம்

32. இன்பதுன்ப தன் உபமானம் ஓம்பும் பரமயோகி
அடங்கா மனம் அடங்க வேண்டும்

33. மன அலை குலையில் சமதிருஸ்டை யோகம்

34. மன அலை அடக்கல் காற்றை அடக்கல் போல் கடிதே.

35. அப்பியாசம் வைராக்கியம் அடங்குமே மனஅலை.

36. மன அடக்கம் உபாயம் மேலது யோகம்
37. சிராத்தைஉடை அற்ப முயற்சி குறையோகம் கதி
38. பிரம்ம மார்க்கத்தில் வழுவல் சிதறிய மேகம்
39. ஐயம் அறும் ஞானஈசன்
40. நலம்செய் நலிவில் இம்மை மறுமை
41. யோகவழு புண்ணியர் பூமியில் வாழ்வு
42. யோகவழு யோககுல வாழ்வு
43. முன்யோக சாதனைபின் பிரயத்தனம் பரிபூரணம்
44. வேதம்கட யோகசாதனம் பூர்வஜன்ம அப்பியாசம்
45. பாவ பரிசுத்தம் பல்ஜன்ம பரிபக்குவம் கடக்கும்
பிரயத்தன பரிசுத்தம் யோகசாதனம் பரகதி நிலை.
46. தவசி பண்டிதர் கர்மிகள் மேலது யோகம்
தவசி, பண்டிதர் கர்மி மேலது யோகி
47. சித்தம் சிரத்தையும் இறைபூஜை முதன்மையோகி.

## 7. ஞான விக்ஞானயோகம்

### ஈசனும் அவருடைய சேதன அசேதன பிரகிருதிகளும்

1. இசைந்த மனத்தினாய் சரண்யோகம் ஐயமறும் ஞானம்
2. ஞான விக்ஞானம் பூரணம்
3. மனநிறைவு இறை முயற்சி சிலர் சித்தி.
4. அட்ட இறைபிரகிருதி நிலம் நீர் காற்று வானம் மனம் புத்தி அகங்காரம்.
5. கீழ்மையது பஞ்சபூதம் அந்தக்கரணங்களின் பிரகிருதி
   மேன்மையது ஜீவ போத பிரகிருதி காண்பீர்.
6. உயிர் ஈர் பிரகிருதி ஜகத்தோற்ற ஒடுக்கம் இறை
7. யாவும் மணிக்கோவை இறையுள்
8. நீரில்சுவை சூரிய சந்திர ஜோதி வேதங்களில்
   ஓங்காரம் வானில் ஓசையாகவும் மக்களிடம்
   ஆண்மையாகவும் பரம்.
9. மண்ணில் நறுமணமாகவும் தீயினுள் சுடராக
   உயிர்களுள் உயிர்ப்பா தபசாக இறை.
10. எல்லா உயிரினது நிலைபேறான வித்து அறிவுக்கு
    அறிவாக ஆத்ம சொரூபமாக ஈசன்.
11. பலவான்களிற்று காமராகமற்ற சாமர்த்தியமாகவும்
    உயிர்களிடத்து அறக்காமம் மாயினேன்.
12. முக்குணங்களில் உண்டான பொருள்கள்
    என்னில் தோன்றியவை என்னைச் சார்ந்தவை
    நான் அவைகளை சாரவில்லை.
13. முக்குணங்களாலாகிய வஸ்துக்களினால்
    இவ்வுலகமெல்லாம் மயங்கி
    அழியா என்னை அறிகிறதில்லை.
14. குணங்களால் ஆகிய தேவமாயையை
    தாண்டுவர் என் சரணடியார்.
15. பாவச் செயலர், மூடர், கடையர் மாயையினால்
    ஞானம் அபகரிக்கப்பட்டபின், அசுர இயல்பினர்
    வணக்கம் அற்றவர்கள்.
16. துன்புற்றோன் ஞானவேட்கையன், பொருளின்பம் தேடுபவன்
    ஞானி என நால்வகை அறச் செயலாளர்
    என்னைப் போற்றி வணங்குவர்.
17. போற்றுவர் இடையறாயோகத்தில் மேலது

ஞானியின் என் பிரியமும் ஞானி மேலது என் பிரியமும்.

18. ஞானியின் ஆத்ம சொரூபம் யோகமிக உத்தம கதி
    என் ஆத்ம சொரூபம்.
19. பல பிறவி கடந்தே வாசுதேவ சொரூபம் கண்டு
    என்னை வணங்கும் ஞானி மகாத்மா.
20. காமத்தின் ஞான அபகாரம் அந்தந்த நியமம் மூலம்
    பிற தேவதைகளை வணங்குவர்.
21. பக்தன் அர்ச்சிக்கும் தேவவடிவத்தில் அதே சிரத்தையில்
    நான் அசையாததாக அருளுகின்றேன்.
22. சிரத்தையுடன் வணங்கும் யாவர்க்கும் அருளுபவன் யான்.
23. அற்பஅறிவு அல்ல பயன் தேவர்களை வணங்கின்
    தேவ பயன் என்னடி சரண் முக்தி
24. பரசொரூபம் அறியா அறிவிலிகள் புலன்களுக்கு எட்டா
    என்னை புலன்களுக்கு தென்படுபவனாக எண்ணுகின்றனர்.
25. கவசம் பிறவா இறவா அழியாத என் பிரகாசத்தைக் காட்டுவதில்லை.
26. சென்றன இருப்பன வருவன ஆகிய உயிர்கள் அனைத்தையும்
    நான் அறிவேன் என்னை யாரும் அறியார்
    அறிந்தும் அறியாதவன் யான்.
27. இருமை மயக்கம் வாழ்வில் இணைபிரியாதது.
28. புண்ணிய கருமம் பாவம் அகல இருமைமயக்கம் நீங்கி
    உறுதியான விரதமுடையவர்களாய் என்னை வழிபடுவர்.
29. மூப்பு, மரண விடுபட வழிபட பிரமத்தையும்
    ஆத்ம சொரூபத்தையும் கர்மத்தையும் அறிவர்.
30. அதிபூதம் அதி தெய்வம் அதி யக்ஞும் யோகநிலையில்
    மரணவிழிம்பிலும் சொரூபஞானம் பெற்று என்னை அறிவர்.

## 8. அக்ஷரம் ரஹ்மயோகம்

### சகுண பிரம்ம உபாசனை

1. யாத்மம் கர்மம் அதிபூதம் அதிதெய்வம் மேலது பிரம்மம்.
2. மரணகாலத்திலும் தன்னடக்கம் அதியக்ஞன் ஆவான்.
3. அழிவற்ற மேலான அத்யாத்மம் பிரமம்.
   உயிர் உண்டு பண்ணி நிலைக்கச் செய்தலாகிய வேள்வி கர்மம்.
4. உடல் எடுத்தவர்களில் உயர்ந்தவன் அழியும் பொருள்
   அதிபூதம் புவியில் சயனிக்கும் புருஷன் அதிதெய்வம்
   இவற்றுள் அதியக்ஞும் நானே.

5. மரணத்திலும் என்னை நினைந்து உடலைத் துறப்போன்
என் சொரூபத்தை அடைவதில் ஐயமில்லை.
6. அந்திமத்தில் வேண்டுவது அடையப்படும்.
7. போர் புரியினும் என் அர்ப்பணம் என்னடி.
8. ஒருமுக யோகசித்தம் சுயப்பிரகாசமான பரசித்தம்
9. முற்றும் உணர்ந்தோன் தொல்லோன் அனைத்தையும்
ஆள்பவன் அணுவுக்கு சூக்குமத்தில் சூக்குமமான
நுண்மையினைச் சிந்தனைக்கு எட்டாத வடிவுடையோன்
ஒளிர்பவன் இருளுக்கு அப்பாற்பட்டவன் யான்.
10. அந்திமநேரத்தில் புருவமத்தியில் பிரானை வைத்து
என்னை துதிப்போர் திவ்விய பரப்புருஷனாவர்.
11. வேதம் அறியின் அறிவற்றது அறியும்
பற்றற்ற பிரம்மசரியம் தனை.
12. பொறிவாயில் அடக்கி மனதை இருதயத்தில் நிறுத்தி
சென்னியில் இருத்தல் பரமகதிநிலை.
13. ஓம் என உடலை நீத்தல் பரமகதி நிலைவழி.
14. என்னை இடையறாது துதிக்கும் யோகிக்கு நான் அகம்.
15. பரமபக்குவ மகாத்மாக்கள் பரமுத்தியடைவர்.
16. பிரலோக வரை உள்ள உலகங்களுக்கு மறுபிறப்பு உண்டு.
என்னை அடைந்தவர்களுக்கு மறுபிறப்பு இல்லை.
17. ஆயிரம் சதுர்யுகம் பகல் ஆயிரம் சதுர் யுகம் இரவு என
மிளிர் இராப்பகல் தத்துவம் பிரம்மா காண்.
18. பிரம்மனின் பகலில் தோற்றம் இரவில் ஒடுக்கம்.
19. உயிர்கள் பிறந்து பிறந்து இரவில் தன்வசமின்றி ஒடுங்குகிறது.
பகலில் வெளிப்படுகிறது.
20. அவ்யக்தத்திலும் மேலான அவ்யக்தம் உளது.
ஆதீத அவ்யக்தம் தன்மயமான பிரமம்.
21. அவ்யக்தம் அக்ஷரம் பரமகதி சேர் பரமபதம்.

22. சிதாகாசமாகிய பரம்பொருளில் சரம், அசரம் அடங்கியுள்ளது.
பரமபுருஷன் ஆத்ம சொரூபானு சந்தானம் அனன்யயா பக்தியால்
அடையப்படுகின்றது.
23. ஒளிமார்க்கம் இருள்மார்க்கம் உடல் நீங்கும்
யோகிகள் காலம் தகையது முத்தியும் பிறப்பும்

24. தீ ஒளி, பகல் சுக்கிலபஷம் உத்தராயணம் இல்
பிரம்மஞானிகள் பிரம்மம் அடைவர்.
25. புகை இரவு கிருஷ்ணபஷம், தக்ஷணாயம் யோகிகள்
சந்திர ஒளியை பெற்று மறுபிறவி அடைவர்.
26. ஒளிவழி பிறவாமை இருள்வழி பிறப்பு சாசுவதம்
27. இருவழி அறியோகி மோகமற்று யோகத்தின் நிலை.
28. அக்ஷரபிரம ஞான யோகி வேதம் வேள்வி தவம், தானம்
கடந்த ஆதியாம் பரகதி.

## 9. ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்

### சகுண பிரம்மத்துக்கும் பிரகிருதிக்கும் உள்ள தொடர்பு

1. அனுபவ ஞானத்தில் அசுப விடுதலை.
2. தூய எளிய தர்மயிக்க அழியா மறை மேலது ஞானம்
3. தர்ம சிரத்தையில் முத்தியில்
4. பொறிவழியில் வியாபகம் உயிர் அனைத்தும் என்னில் நான் இல்.
5. ஆக்கம் காப்பு என்னில் இல்பூதம் ஈசுவரயோக மகிமை.
6. வானில் காற்றுப்போல் பூதங்கள் என்னில்.
7. கற்பமுடிவில் பூதங்கள் என் பிரகிருதியில்
கற்ப தொடக்கத்தில் மறுபடி தோற்றுவிக்கின்றேன்.
8. என் பிரகிருதியில் வசமாகிய உயிர்திரள் யாவற்றையும்
மீள மீள தோற்றுவிக்கின்றேன்.
9. கற்ப விகற்ப கர்மத்தின் பற்றற்ற என்னில் பந்தம் இல்.
10. என் பார்வையில் பிரகிருதி தாவர ஜங்க
உலகத்தை சிருஸ்டிக்கின்றது.
11. பரம அறியாமூடர் மானுடமாக அலம்.
12. வீண் ஆசை பயனற்ற செயல் புல்லறிவு அசுர இயல்பைத் தரும்.
13. மகாத்மாக்கள் என் சரண்.
14. திவ்விய விரதம் நித்திய யோகிகள்.
15. ஒன்றாய் பலவாய் வேறாய் ஞான யக்ஞம்
16. கிரது யக்ஞம் ஸ்வதா ஔஷதம் மந்திரம் ஹோமம்
அக்கினி, வேட்டல் யானே.
17. ஜகமுதற்றோன் கர்ம பலன் நல்குபவன்
அறியத்தக்கவன் தூய்மை செய்பவன்
ஓங்காரம் ரிக் சாமம் யஜுர் வேதங்கள் யானே.

18. கர்ம புகலிடம் பிரம்மம்.
19. காமிய கர்மமாக சத்து அசத்தாக நான்
வெப்பம் மழை சாகாமைசா தருகிறேன்.
20. மூவேதம் யாகம் வானுலகு திவ்விய சுவர்க்கம்
21. மூவேதமறி யோகப்பித்தர்கள் பிறப்பு இறப்பு எய்துவர்.
22. அன்னியமற்ற நித்திய யோகிகளுக்கு அருளுகிறேன்.
23. சிரத்தையுடன் பக்தி எத்தேவதையோ விதிவழுவில் என்மீதே.
24. விதிவழு வணக்கம் பிறவியில் வீழ்வு வணங்கின் அடைதல்.
25. தேவர் தேவர் பிதிர் பிதிர் பூதம் பூதம் எனவும்,
என்னை வணங்கின் என்னை எய்துவர்.
26. இலை மலர் கனி நீர் பக்தியுடன் படைப்பு அமுது.
27. எத்தவமும் இறை அர்ப்பணம்.
28. சுபஅசுப கர்மபற்ற விடுதலை சந்நியாச யோகமுத்தி.
29. எல்லா உயிர்களிடத்தும் சமன் பக்தி அதில் மேல்.
30. பயன் கருதா வழிபாடு கேடுடைத்தானாயினும் சாது
31. அறவான் நித்திய சாந்தியை அடைவான்.
32. பிறவி மனபரிபாகம் பரகதி நிச்சயம்.
33. நிலையற்ற சுகமற்ற உலகவாழ்வில் என்னை வழிபடு.
34. மனதை என்னில் வைத்து பக்தி பண்ணி
யாகம் செய்து வணங்கு என்னை அடைவாய்.

## 10. விபூதி யோகம்

### அனைத்துக்கும் ஆதிமூலமாய் இருப்பவர் பகவான் சுலோகங்கள் 1 – 6

1. என்மொழி உவகையில் உன்நலம் நவிலுகிறேன்.
2. வானவர் மாமுனிவர் உணரா அவர் முதற்காரணர் யான்.
3. ஆதியில் பிறவா பதியறி மானிடர் பாவவிடுதலை.
4. புத்தி ஞானம் தெளிவு பொறுமை சத்தியம் அடக்கம்
அமைதி, இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு அஞ்சுதல்
அஞ்சாமை என்னில் உற்பவம்
5. அஹிம்சை, மனநடுவு, திருப்தி, தவசு தானம்
புகழ்ச்சி இகழ்ச்சி என்னில் உற்பவம்
6. என் பிரபாவம் மஹரிஷிகள் எழுவர் மனுக்கள் நால்வர்
அஃதங்குற்றே உதயம் உயிர்கள் யாவும்.
7. என் விபூதி என் யோகம் அறியில் அசைவில் யோகம்
8. சகல தோற்றுவாயாய் என்னை அறியும் ஞானிகள் அன்பின் ஆராதனை.

9. சித்தம் உயிர் என்பால் என்புகழ் போற்றி மகிழ்வர்.
10. யோகமுயற்சியும் அன்புடன் வணங்கின் புத்தியோக அருள்
11. அந்தக்கரணத்தில் மெய்ஞானச்சுடரால் அஞ்ஞான இருளை அகற்றி அருளல்
12. மேலாம் பிரம்மம் உயர் ஒப்பற்ற புனிதம் தாம் ஆவீர் நித்தியமானவர்
13. ஆதிதேவன் பிறவாதவன் எங்கும் நிறை பொருள் இயம்பும்
14. தேவர்கள் அறியா தானவர்கள் அறிய கேசவன் ஓதும் உண்மை.
15. உயிர்களைப் படைத்த உயிர்களுக்கு இறை தேவசேவா
அண்ட நாயகன் புருஷோத்தமா உம்மை நீரே உள்ளபடி அறிவீர்
16. உலக நிரப்பிய விபூதிகளை வர்ணித்தருள்
17. யாண்டும் சிந்தித்து எப்பாங்குகளில் சிந்திப்பது யோகி.
18. யோகமும் விபூதியும் ஜநார்த்தன அறிவுமொழி.
19. ஈசுவர விபூதி விஸ்தரிப்பு முடிவில்லது.
20. உயிர்களின் ஆதியும் இடையும் இறுதியும் நானே.
21. ஆதித்தியர்களுள் விஸ்ணு, ஒளியில் ஞாயிறு, மருந்தில் மரீசி,
நட்சத்திரத்தில் சந்திரன் ஆக யான்.
22. வேதங்களுள் ஸாமவேதம் தேவர்களுள் இந்திரன்
இந்திரியங்களில் மனம் உயிர்களில் உணர்வு யான்.
23. ருத்திரர்களுள் சங்கரன், யக்ஷரக்ஷஸர்களுள் குபேரன்,
வஸுக்களுள் அக்னி, மலைகளுள் மேருமலையான்
24. புரோகிதர்களுள் பிரஹஸ்பதி, சேனைத்தலைவரில் கந்தன்,
நீர்நிலைகளில் சமுத்திரமாக நான்.
25. மஹரிஷிகளுள் நான் பிருகு, வாக்குகளில் பிரணவம்,
யக்ஞங்களில் ஜப யக்ஞம், ஸ்தாவரங்களுள் இமாலயம் யான்.
26. மரங்களில் அரச மரம், தேவரிஷிகளுள் நாரதர்,
கந்தர்வர்களுள் சித்தரதன், சித்தர்களுள் கபிலமுனி.
27. குதிரைகளுள் உச்சை சிரவஸ், யானைகளுள் ஐராவதம்,
மக்களுள் வேந்தன் யான்.
28. ஆயுதங்களுள் வஜ்ராயுதம், பசுக்களுள் காமதேனு,
பிறப்பவர்களிடத்து மன்மதன், பாம்புகளுள் வாஸுகி யான்
29. நாகங்களுள் அனந்தன், ஜலதேவதைகளுள் வருணன்,
பித்ருக்களுள் அரியமான், அடக்குபவர்களில் யமன் யான்.
30. தைத்திரியர்களுள் பிரஹ்லாதன், கணிப்பவர்களுள் காலன்,
விலங்குகளுள் சிம்மம், ப்றவைகளுள் கருடன் யான்.
31. தூய்மைப்படுத்துபவைகளுள் காற்றாகவும், ஆயுததாரிகளில் இராமனாகவும்,
மீன்களுள் மகரமாகவும், நதிகளில் கங்கையாகவும் யான்.

32. சிருஸ்டிப் பொருள்களுக்கு ஆதி நடு அந்தம் யான்
வித்தைகளுள் ஆத்மவித்தை யான் தர்க்கிப்பவர்கள் யால் வாதம் யான்.
33. எழுத்துக்களுள் அகரம் யான் கூட்டுச்சொற்களுள் இருசொற்கூட்டு யான்
ஓயாத காலம் யான் எங்கும் பரந்து வினைப்பயன் வழங்குபவன் நான்.
34. அழிக்கும் மரணம் யான் வளர்செல்வம் நான் பெண்மைகளுள் புகழ்,
திரு, சொல், நினைவு அறிவு திண்மை, பொறை யானே.
35. ஸாமகானங்களில் பிரஹத்ஸாமம் சந்தங்களில் காயத்ரீ
மாஸங்களில் மார்கழி பருவங்களில் வசந்தம் யான்.
36. வஞ்சகர்களுடைய சூதாட்டம் யான் தேஜஸ்லிகளுடைய
தேஜஸ் நான் வெற்றியாகவும், முயற்சியாகவும்
சாத்விகர்களுடைய சத்துவகுணமாகவும் யான்.
37. விருஷ்ணிகளுள் வாசுதேவன், பாண்டவர்களுள் தனஞ்ஜயன்,
முனிகளுள் வியாசர், கவிகளுள் சுக்கிரன் யான்.
38. தண்டனையில் செங்கோல் வெற்றியில் நீதி
ரகசியங்களில் மௌனம் ஞானிகளுடைய ஞானம் யான்.
39. எல்லா உயிர்களுக்கும் வித்து நான் நானின்றி யாதில்லை.
40. என் திவ்விய விபூதிகள் முடிவில் அதில் இ∴து சிகபதே.
41. மஹிமையும் அழகும் வலியும் உடையது எதுவோ
அது என் பிரபையின் ஒரு பகுதியில் உண்டானது.
42. என்னுள் அம்சமே உலகனைத்தையும் தாங்க என் விபூதி மகிமையை
பலவித பகுத்தறிவதால் ஆவது யாதொன்றில்லை.

## 11. விஸ்வரூபதர்சன யோகம்

### அகில அண்ட வடிவினன்

1. ஆத்மதத்துவ மொழி மயக்கம் மறைபொருள் உரையால் மறைந்தது.
2. உயிர்களின் பிறப்பு இறப்பு முடிவற்ற இகைமஹிமை யாதோ
3. புருஷோத்தம ஈசுவர வடிவம் யாதோ
4. ஆயின் அழிவற்ற உருவைக் காட்டியருள்க
5. பலவகை பலநிற பலவடிவ தெய்வ உருவங்களை
நூறு நூறாய் ஆயிரம் ஆயிரமாய் பார்.
6. பன்னிரு ஆதித்தியர் எட்டு வஸுக்கள்
பதினொரு உருத்திரர்கள் இரண்டு அச்வினிகள்
நாற்பத்தொன்பது மருந்துக்கள் பார் என பல
7. ஜங்கம ஸ்தாவரங்கள் ஜகமுழுதும் தேவப் பிரகிருதி

8. ஞானக்கண் விசுவரூபதரிசனம்.
9. யோகத்திற்கு பேரிறைவன்ஹரி பார்த்தனுக்கு ஈசுவரரூபம்
10. ஈசுவர வடிவம் அநேக முகங்கள் கண்கள் உடையது.
பல அதிசயக் காட்சிகள் கொண்டது. தெய்வீக ஆபரணங்கள்
பல அணிந்து தெய்வீக ஆயுதங்கள் அநேகம் ஏந்தியது.
11. திவ்வியமான மாலைகளும் ஆடைகளும் அணிந்த
திவ்விய கந்தம் பூசிய பெரும் வியப்பூட்டுவது பிரகாசிப்பது
முடிவற்றது எங்கும் முகமுடையது தெய்வப் பெற்றி.
12. ஆயிரம் சூரியர்கள் உதய ஒளி மஹாத்மா ஒளி.
13. பலவாய் பிரிந்துள்ள உலகம் யாவும் தேவதேவனின் தேகத்தில் ஒன்றியது.
14. தனஞ்ஜயன் வியப்பில் வணங்கினான்.
15. தாமரைமலர் யிசை பிரம்மாவும் ரிஷிகள் எல்லோரும் ஸர்ப்பங்கள்
உயிர்கள் அனைத்தும் தேவர்கள் எல்லோரும்
விசுவரூபத்தில் தென்படுகின்றனர்.
16. அகில அண்ட வடிவின அநேகம் கைகள், வயிறுகள், முகங்கள், கண்கள்
உடைய அநேக ரூபங்கள் எங்கும் முடிவு, மத்தி ஆதியை காணிலை.
17. கிரீடம் தரித்து கதை தாங்கி சக்கரம் ஏந்தி எங்கும்
வீசும் ஒளிப்பிழம்பாய் காண்பதற்கு அரியவராய்
சுடும் சூரியாக்கினி போன்றவராய் காண்கின்றேன்.
18. அழியாப்பரம் அறியத் தகுந்தவர் உலகுக்கு ஒப்பற்ற உறைவிடம்.
மாறாதவர் தர்மரக்ஷிகர் என்றென்றுமுள்ள பரமாத்மா தாம்.
19. ஆதி நடு அந்தம் இல்லாதவர் முடிவில்லா சக்தியுடையவர்
எண்ணிறந்த கைகளை உடையவர். சந்திர, சூரியர்களைக்
கண்களாக உடையவர். வெந்தழல் வாய் படைத்தவர். தமது
தேகஸினால் இப் பிரபஞ்சத்தை எரிக்கின்ற உம்மைப் பார்க்கின்றேன்.
20. விண் மண் உலகின் இடைவெளியும் மற்றத்திசைகள்
யாவும் மஹாத்மாவே அற்புத உக்கிர வடிவு
21. வானவர் உன் சரண் மஹரிஷி சித்தர்கள் போற்றிப்புகழ்
22. யாவரும் வியப்பில் காட்சி.
23. நெடும் தோளாய் பலமுகங்கள் கண்கள் பல் கைகள்
துடைகள் பாதங்கள் பல வயிறுகள் பயமுறுத்தும்
பல வளைந்த பற்கள் பிரமிப்பு உடைய பேருடு.
24. விஸ்ணுவே வானளாவி பல நிறங்களுடன் பிரகாசிக்கும் திறந்த வாய்களை
உடைய கனல் வீசும் விசாலக் கண்களை உடையரே பதகளிப்பில் யான்.
25. அச்சப்பற்கள் ஊழித்தீதகைய முகங்கள் திசைகளை மறைக்கிறது.

அமைதியைக் குலைக்கிறது. வையகத்துக்கு ஆதாரமாய் அருளுக.

26. கௌரவர் சேனைகள் யாவும் நம் சேனையும் உம் வாய்க்குள் பிரவேசம்
27. சிரசு நொருங்கி உம் பல்லிடுக்கில் சிலர்.
28. நதி கடல்சேர் வையகவீரர் வெந்தழல்வாய் சேர்
29. விட்டில் பூச்சிகள் போல் நானிலத்து மாந்தரும் நும்முள்.
30. வெங்கதிர் வாய்தனில் உலகனைத்தும் விழுங்கி நுகரும் விஸ்ணுவே
    உம் கொடுஞ்சுடர்கள் வையகம் முழுதும் எரிக்கின்றது.
31. உக்கிரரூபா விஸ்ணுவே வணக்கம்
    நீவீர் யாவிர் அருளுவீர்.
32. உலகங்களை அழிக்கும் பெரும் வல்லமையுடைய
    காலமாக யான் உள்ளேன். நீயின்றியும் எதிர்சேனை
    அணிவீரர்கள் அழிவது திண்ணம்.
33. எழுந்திரு அனுபவி நீ நிமித்தம் மாத்திரமே.
34. என் கொல் என் கருவி நீயே வருந்தாதே யுத்த வெற்றி உனதே.
35. நமஸ்கரித்து வணங்கி குறுகினன் கிரீடன்.
36. ஹிருஷீகேசா உம்புகழ் உலகில் இன்ப ஆராதனை.
37. தோன்றி  தோன்றா அழியாப்பரம் நீரே
    அந்தமில்லா மஹத்மன் முதற்காரணம் நமஸ்காரம்.
38. எண்ணில் வடிவுடை முதற்பொருள் பிரபஞ்சத்திற்கு மேலான இல்
    அறிவோன் அறிபவர் அறியப்படுபொருள் அருட்பெருநிலம் ஆவீர்
    உலகம் யாவும் உம்தம் வியாபகம்.
39. முப்பாட்டனார்க்கு நமஸ்காரம்
40. முன்பின் எல்இல் நமஸ்காரம்
41. மஹிமை அறியாதது பிரியத்திற்கு மன்னித்தருள்.
42. ஒப்பிலாததாய் வணக்கம் மன்னித்தருள்
43. ஒப்பற்ற பெருமையுடையவரே சரம்அசரம் ஆகிய லோகத்தின்
    தந்தை! குருவுக்கு குருவே! மூவுலகத்திலும் ஒப்பாரும் மிக்காரும்
    இலா போற்றுதற்குரியவரே!.
44. காயத்தால் வீழ்ந்து வணங்கி போற்றும் எனக்கு அருள்தா.
45. பேரருள் காட்சி தந்த ஜகத்திற்கு எல்லாம் இருப்பிடமானவரே அருளுக.
46. ஆயிரம் கைகளை உடைய விசுவமூர்த்தியே கிரீடமும் கதையும்
    சக்கரமும் உடையதாக நான்கு கைகளுடன் அருளுக.
47. யோகவலிவில் ஒளிநிறைந்த முடிவில்லா முழுமுதலான விஸ்வரூபம்
    காட்சியினை முதன்முதலில் அர்ஜுனனுக்கு கிருஸ்ணா அருளுதல்.

48. வேதம் ஓதி யக்ஞத்தால் தானங்களால் கிரியைகளால் உக்கிர தவங்களால் மனுஷ்ய லோகத்தில் காணமுடியாத விஸ்வரூபக் காட்சி.
49. ஸம்கார மூர்த்தி சாந்தமூர்த்தியாக அருட்காட்சி காண்.
50. மஹாத்மா இனிய வடிவில் தேற்றினார்.
51. இனிய மானிடவடிவில் ஜநார்த்தனான் அருள் மனம் தெளிதல்.
52. தரிசிப்பதற்கு அரிய ரூபதரிசனம்.
53. வேதங்களால் தவத்தால் தானத்தால் யாகத்தால்
    தரிசிக்க இயலாதவன்.
54. மாறாத பக்தியாலேயே என்னை உள்ளபடி
    உணரவும் காணவும் அடையவும் கூடும்.
55. எனக்காகக் கர்மம் செய்கின்றவன். என்னைக் குறியாகக் கொள்கின்றவன். என்னிடம் பக்தி பண்ணுகின்றவன். எவ்வுயிரிலும் வெறுப்பற்றவன் எவனோ அவனே என்னை அடைகிறான்.

**12. பக்தி யோகம்**

1. யோக உறுதி உபாசிப்பு நிர்க்குண பிரம்ம உபாசிப்பு
   யோகம் அறிவர்.
2. என்மேல் மனம் யோகம் நிலை சிரத்தையராய் உபாசிப்பு
   யோக மேன்மை என்கொள்.
3. மாறாதது நகராதது நிலைத்தது அழியாதது விளக்க முடியாதது பிரமம்.
4. சமபுத்தியுடன் பொறியடக்கி எங்கும் வியாபித்த பிரம்மத்தை
   உபாசித்து உயிர்களிடத்து நன்மை செய்வோர் என்னிடம் வந்தடைவர்.
5. நிர்க்குண பிரம்மத்தில் சித்தம் அதிபிரயாசை அன்றில்
   நிர்க்குண பிரம்ம நிஷ்டை அரிது.
6. சர்வகர்மங்களை எனக்கு அர்ப்பணித்து என்னையே பரகதியென அன்னியது அணுகா யோகத்தில் என்னையே தியானித்து உபாசிக்கிறார்கள்.
7. சித்தத்தை என்பால் வைத்தவர்களை
   மரண சம்சாரசாகரத்தினின்று கரையேற்றுவேன்.
8. என்னில் மனம் என்னில் புத்தி எனில் என்னில் வசிப்பாய்.
9. சித்தத்தை என்பால் அப்பியாச யோகம் என் இச்சையில்.
10. அப்பியாசம் வல்லில் என் கர்மம் சித்தி.
11. என் சரண் தன்னடக்கம் கர்மபலன் அர்ப்பணம் மேல்.
12. அப்பியாசம் மேலது ஞானம் ஞானம் மேலது தியானம்
    தியானம் மேலது கர்மபல தியாகம் தியாகம் தருவது சாந்தி.

13. உயிர்கள் மீது வெறுப்பு இன்றி நட்புக் கருணைகாட்டி மமகாரம் அகங்காரம் அற்று இன்ப துன்பங்களை சமனாகப் பொறுமையுடன் இருத்தல் யோகம்.
14. தன்னடக்கம் திட நிச்சயம் என் மனம் புத்தி சமர்ப்பண யோகி என் பிரியம்.
15. இடரிலன் இடரிடன் களிப்பு கோபம் அச்சம் மனக்கலக்கம் அற்றவர் என் பிரியம்.
16. வேண்டுதலிலான் தூயவனாய் திறமையுற்ற பக்கம்சாராதவனாய் துயரமற்றவனாய் காமிய தர்மங்களை துறத்த என் பக்தன் என் பிரியம்.
17. மகிழ்தல் வெறுத்தல் துயருதல் ஆசை அற்ற நலகேடு அகன்ற பக்தன் என் பிரியம்.
18. சத்துருமித்துரு மான அபமானம் சமனாயிருப்பவன் குளிர் வெப்பம் இன்பம் துன்பம் சமனாயிருப்பவன் பற்றற்றவன்.
19. புகழ் இகழ் ஒன்றென மௌனி கிடைத்ததில் திருப்தி இல்இல்இல் ஸ்திரபுத்தியுடை பக்தன் என் பிரியம்.
20. சிரத்தையுள் என் கதியென தர்ம அமிர்தம் அனுஸ்டானம் என் பிரியம்.

## 13. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாவ யோகம்

**பிரகிருதி புருஷன், க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞன், ஞானம் நேயம் யாதோ இச்சம்.**

1. உடலம் க்ஷேத்திரம் தனையறிபவன் க்ஷேத்திரக்ஞன்.
2. க்ஷேத்திரங்கள் அனைத்திலும் யான் க்ஷேத்திரக்ஞன் க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞனைப் பற்றிய அறிவே ஞானம் யாம்.
3. க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞன் மகிமை என்னில் கேள்.
4. ரிஷிகளால் விதவிதமான சந்தஸ்களால் பாங்காக கீதம் யுத்தியால் நிச்சய புத்தியால் பிரமம் பதம்.
5. மகாபூதங்கள், அகங்காரம், புத்தி, மூலப்பிரகிருதி, இந்திரியங்கள்
6. பத்து, மனம் ஒன்றும் இந்திரிய யாதார்த்தங்கள் ஐந்தும் விருப்பு, வெறுப்பு, சுக, துக்கம், உடலமைப்பு, உணர்வு, மன உறுதி க்ஷேத்திரமும் அதன் தோற்றங்களும்.
7. தற்பெருமையின்மை, தருக்கின்மை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம் ஞானத்துக்கேது.
8. இந்திரிய போக விஷயங்களில் விருப்பின்மை, அகங்காரமின்மை, பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி, துயரம் ஆகியவைகளில் அனுதாபித்தல் ஞானத்திற்கேது.
9. பற்றற்ற அபிமான அபிமானமற்ற நிலை, வேண்டுவன வேண்டாதவை நடுமன நிலைவ ஞானத்திற்கேது

10. வேறு எதையும் எண்ணாத யோகம், என்மேல் பிறழாத பக்தி, தனிமை, கூட்டம் தவிர்த்தல் ஞானத்திற் கேது.
11. ஆத்மஞான நிலைபேறு உண்மைப்பொருள் ஆராய்ச்சி ஞானம்
இவற்றில் அன்னியம் அக்ஞானம்.
12. அறியத்தக்கது அறிந்து சாகத்தன்மை எய்துதல் பகிர்கிறேன்
அது ஆதியந்தமில்லா பரப்பிரம்மம் உளது இலது எனவொண்ணாதது.
13. எங்கும் கை, கால்கள் எங்கும் கண், தலை, வாய்கள்
எங்கும் காதுகள் பிரமம் உலகில் சர்வவியாபகம்
14. எல்லா இந்திரியங்கள் வாயிலாக ஒளிர்வது, எல்லா இந்திரியங்களும்
அற்றது, பற்றற்றது அனைத்தையும் பற்றித் தாங்குவது
குணங்களே இல்லாதது குணங்களை அனுபவிப்பது ஞான பரிபாகம்.

15. பொருள்களுக்குள் உள்ளும் புறமும் உள்ளது. அது அசையாதது,
அசைவது சூக்ஷ்மமாயிருப்பதால் அறியவொண்ணாதது,
தூரத்திலும் அருகிலும் இருப்பது பிரமம்.
16. பிளவு படாதது பிளவு பட்டதுபோல் இருக்கும். பொருள்களை தாங்குவதும் விழுங்குவதும் உண்டு பண்ணுவதும் பரம்.
17. ஒளிக்கெல்லாம் ஒளி இருளுக்கு அப்பாற்பட்டது.
அறிவும் அறியப்படுபொருளும் அறிவினால் அடையப்படுவதும்
எல்லோர் இதயத்திலும் உள்ளது.
18. க்ஷேத்திரமும் ஞானமும் ஞேயமும் அறியும் பக்தன் என்னை அடையத் தகுதியானவன்.
19. பிரகிருதி புருஷன் ஆதியில்லாதவை. வேறுபாடுகளும் குணங்களும்
பிரகிருதியில் பிறந்தவைகள்.
20. பிரகிருதி காரணமாம் உடல் இந்திரியம்
ஜீவன் காரணமாம் இன்பதுன்பம் அனுபவம்
21. புருஷன் பிரகிருதியில் நின்று பிரகிருதியில் தோன்றிய
குணங்களைத் துய்க்கிறான். குணப்பற்று நலம்கேடு உடைய பிறவிகள் ஏது.
22. இத்தேகத்தில் பரமபுருஷன் சாக்ஷி, அனுமதிப்பவன், தாங்குபவன், அனுபவிப்பவன், மஹேச்வரன், பரமாத்மன் என இயம்பப்படுகிறான்.
23. புருஷனையும் குணங்களுடன் கூடிய பிரகிருதியையும் அறிபவன்
வாழ்வின் மறுபிறப்பில்.
24. தியானத் தெளிவறிவு ஆத்மா உள்ளுணர்வு ஞானயோகம்
கர்மயோகம் ஆத்மா உள்ளுணர்வு உறும்.
25. சிலர் பிறர் உபதேசம் உபாஸித்து மரண நிச்சத்தைக் கடக்கின்றனர்.

26. நிலைத்திணை, இயங்குதினை, எவ்வுயிர் தோன்றியது க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞனுடைய சேர்க்கையால்.
27. எல்லா பூதங்களிலும் சமமாக இருக்கின்றவனை அழிவளவில் அழியாததை பரமேச்வரனை யார் பார்க்கிறானோ அவன் பார்க்கிறான்.
28. எங்கும் சமமாக நிலைத்திருப்பவனாகிய ஈசுவரனை பார்த்து ஆத்மா தன்னை அழிக்காது பரகதியடைகிறான்.
29. பிரகிருதியினால் கர்மங்கள் எல்லாம் செய்யப்படுகின்றன. ஆத்மா செயலற்றது என்று யார் பார்க்கிறானோ அவனே பார்க்கிறான்.

30. எப்பொழுது பிராணிகளின் தனித்தனி வாழ்க்கை ஓர் ஆத்மாவில் இருப்பதையும் அந்த ஆத்மாவில் இருந்தே விரிவாகத் தோன்றுவதையும் காண்கின்றானோ அப்பொழுது பிரம்மமாக ஆகின்றான்.
31. ஆதியில்லாததாலும் குணமில்லாததால் அழிவில்லாத இப்பரமாத்மா சரீரத்தில் இருப்பினும் கர்மம் செய்வதில்லை, பற்றுவதில்லை.
32. எங்கும் நிறைந்துள்ள ஆகாசமானது நுண்ணியதாயிருப்பதனால் எப்படிக் களங்கமடைவதில்லையோ அப்படியே தேகம் எங்கும் நிறைந்துள்ள ஆத்மாவானது களங்கமடைவதில்லை.
33. ஓர் சூரியன் அகில லோகத்தைப் பிரகாசிப்பது போல் க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும் ஆத்மா க்ஷேத்திரம் முழுவதையும் பிரகாசிக்கும்.
34. க்ஷேத்தரம் க்ஷேத்திரக்ஞனுக்கிடையில் வேற்றுமையும் உயிர்கள் பிரகிருதியில் இருந்து விடுதலையடைதலையும் ஞானக்கண்ணால் யார் அறிகிறார்களோ அவர்கள் பரத்தை அடைகிறார்கள்.

## 14. குணத்ரய விபாவ யோகம்

1. உலகவாழ்வில் மேலாம் சித்தி ஞானங்களில் சிறந்ததும் பரம்பொருள் பற்றிய ஞானம்.
2. பிரம்மஞானம் என்னடி சிருஷ்டியில் பிரளய துன்பமில்
3. பெரும் பிரகிருதி பிரம்மா கர்ப்பாசயம். அதுதனில் உற்பவம் உயிர்கள்.
4. கர்ப்பாசயம் எல்லாவற்றிலும் பிறக்கின்ற வடிவங்களுக்கு பெரிய பிரகிருதி தாய். கர்ப்பாதானம் செய்யும் தந்தை நான்.
5. பிரகிருதியில் உண்டான சத்வம், ரஜஸ், தாமசம் எனும் குணங்கள் அழிவற்ற தேகியைத் தேகத்தில் பிணிக்கின்றன.
6. சத்துவம் அழுக்கற்றது, ஒளிபொருந்தியது, இடர்படுத்தாதது.

ஞானத்தில் பற்றுதலாலும் பந்தம்.

7. ரஜோகுணம் ஆசைவடிவு வேட்கை பற்றுதலை
உண்டுபண்ணுவது. வினைப்பற்றுதலால் தேகி பந்தம்.
8. தமோகுணம் அக்ஞானத்தில் பிறந்தது. உயிர்களை மயக்கும்
அசட்டை சோம்பல் உறக்கம் ஆம் பந்தம்.
9. சத்துவகுணம் சுகம் ரஜோகுணம் கர்மம் அக்ஞானம்.
10. சத்துவம் ரஜசையும் தமசையும் அடக்கி மேலெழுகிறது.
ரஜஸ் சத்துவம் தமசை ஆளுகிறது.
தமஸ் சத்துவத்தையும் ரஜசையும் அடக்குகின்றது.
11. பொறியாயில் ஞானஒளி சத்துவம் ஓங்கின்
12. பேராசை பிரவிருத்தி, வினைப்பெருக்கு, அமைதியின்மை,
வினையில் விருப்பம் ரஜோகுணமேல்.
13. விவேகமின்மை முயற்சியின்மை தவறுதல், மதிமயக்கம் தமோகுணம் மேல்.
14. சத்துவகுணத்தில் மரணம் ஞானவான்கள் நல்லுலகம்.
15. ரஜோ குணத்தின் மரணம் கர்மப்பற்று பிறப்பு
தமஸில் சாவு அறிவிலிகள் கர்ப்பம்.
16. நல்கர்மம் சாத்வீகம் தூய்மை. ரஜோகுணம் துன்பம்
தமோகுணம் அறிவின்மை.
17. சத்துவத்தில் ஞானம் ரஜஸில் பேராசை தமஸில் அக்ஞானம்
கவனமின்மை மதிமயக்கம் உண்டாகின்றன.
18. சத்துவகுணம் மேல் ரஜோகுணம் இடை தமோ குணம் கீழ்.
19. குணங்களுக்கு வேறான கர்த்தாவைக் காணில் குணங்களுக்கு
மேலாகப் பரம்பொருளைக் காண் ஜீவன் பிரம்ம சொரூபம் அடைகிறான்.
20. உடம்புறு முக்குணம் கடந்து பிறப்பு இறப்பு மூப்பு துன்பம்
என்பனவற்றில் விடுபட்ட ஜீவன் மரணமில்லாப் பெருவாழ்வு.
21. எவ்வடையாளங்களால் ஜீவன் முக்குணங்களையும் கடந்து நிற்பவன்.
முக்குணம் கடக்கும் நடத்தை எவ்வாறு முக்குணங்களைக்
கடத்தல் பிரபுவே.
22. ஒளி செயல் மயக்கம் வாய்ந்தவிடம் வெறுப்பில்லை.
ஒழிந்தவிடம் வேட்கையில்லை.
23. குணங்களால் அசைக்கப்படுவதில்லையே. குணங்கள் தொழில்
புரிகின்றனவென்று ஆத்மாவில் அசையாது இருத்தல் ஞானாதீதஞானி.
24. இன்பதுன்பம் சமனாகக் கொண்ட ஆத்மசொருபத்தில் இருப்பவன் மண்,
கல், பொன்னை நிகராகக் காண்பவன். இனியதையும்,
இன்னாததையும் ஒன்றாக ஓர்பவன் பேரறிஞன்.

புகழ்ச்சி இகழ்ச்சியை ஒன்றாக நோக்குபவன் குணாதீதன்.

25. மானம் அவதானம் நிகர் மித்துரு சத்துரு ஒன்றாக நோக்குபவன்
காமிய கர்மத்தியாகம் செய்தவன் குணாதீதன்.

26. மாறாகப் பக்தியோகம் என் உபாசம்
முக்குணங்கள் முற்றும் கடந்து பிரமம்.

27. அழியா மோக்ஷ நிலையாய பிரம்மத்துக்கும் சாசுவதமான
தர்மத்திற்கும் ஒப்பற்ற சுகத்திற்கும் இருப்பிடம் யானே.

## 15. புரு ஷோத்தம யோகம்

01. வேதம் அறிதல் அழிவிலா இலையறிதல் ஆலமரம்தனில்

02. குணங்கள் தளிர்விடு கிளைகள் வினைகள் வேர்கள் ஆலமரம்தனில்

03. பிரபஞ்ச மரத்திற்கு வடிவு தென்படா ஆதி அந்தம் இருப்பு இல்லை.
பற்றின்மை என்ற வாளால் வெட்டலாம்.

04. பிரம்மபதம் தேடத்தக்கது. ஆதிதொழில் ஆதிபுருஷன் சரண்.

05. அகங்காரம் அவிவேகம் நீக்கம் பற்று என்னும் குற்றம் வென்றவர் பரமாத்ம ஞானம் நிஷ்டர், ஆசை அற்றவர் இன்ப துன்பமென்னும் இருமைகளைக் கடந்தவர்கள், மயக்கம் ஒழிந்தவர்கள் அழிவில்லா நிலையை அடைவர்.

06. மீளா இடம் ஞாயிறு திங்கள் தீ விளங்கா இடம் என் பரமபதம்.

07. எக்காலத்தும் என் அம்சமே ஜீவனாகத் தோன்றி ஜீவலோகத்தில்
பிரகிருதியிலே நிற்கின்ற மனது உட்பட ஆறு இந்திரியங்களையும்
போகத்தில் இழுக்கின்றது.

08. ஈசுவரனால் ஜீவன் உடல் எடுக்கும் போதும் விடும்போதும்
இந்திரியங்களைப் பற்றும் பூவின் மணம் காற்றில்போல்.

09. ஐம்பொறி மனம் விஷயங்களை அனுபவிக்கிறான்.

10. உடலில் இருந்து உடலுக்கு போகின்ற போதும்
உடலில் இருந்து அனுபவிக்கும் போதும் குணத்தோடு கூடியிருக்கும் போதும்
ஜீவனை ஞானக்கண் உடையோர் காண்பர், மூடர் அறியார்.

11. யோகி முயற்சியில் ஆத்மா தனை அறியும் பண்படாத பாங்குடையார்
ஆத்மாவைக் காணில் அறிவிலிகள்.

12. சூரிய ஒளி சந்திரஒளி தீயின் ஒளி யாவும் என்னொளி.

13. என்சக்தியால் பூமியில் உயிர்களைத் தாங்குகின்றேன்.
இனிமை வடிவான சந்திரனாகிப் பயிர்களை போஷிக்கிறேன்.

14. யான் உயிர்களின் உடலில் உதிரக்கனலாக இருந்து
பிராண அபான வாயுக்களுடன்கூடி நால்வகை அன்னத்தைச் செமிக்கின்றேன்.

15. எல்லோருடைய இருதயத்திலும் நான். ஞாபகம், ஞானம், அவற்றின் அழிவும் என்னில் இருந்தே எல்லா வேதங்களாலும் அறியப்படுபொருள் யான். வேதாந்தத்தைச் செய்பவனும் வேதத்தை அறிந்தவனும் யானே.
16. க்ஷரன் என்றும் அக்ஷரன் என்றும் உலகிலே இரு புருஷர்கள் வடிவெடுக்கும் வெவ்வேறு மாயக்காட்சி காட்டவல்ல கூடஸ்தனோ அக்ஷரன் எனப்படுகிறான். ஈசுவரன் அல்லது சகுணப் பிரம்மத்தின் சொரூபங்களான சிவன், சக்தி, விஷ்ணு முதலியன் ஒன்று சேர்ந்த கூடஸ்தன் ஆகின்றது.
17. க்ஷரன் அக்ஷரன் அன்னியம் பிரம்மம் நிர் விகாரப் பரமாத்மா மூவுலகையும் தாங்குபவர்.
18. கூரத்தைக் கடந்து அக்ஷரத்திற்கும் மேலாகிய புகழ் வேதத்திலும், உலகத்திலும் புருஷோத்தமன் யான்.
19. யார் மயக்கமற்றவர்களாக புருஷோத்தமன் என என்னை அறிபவன் முழுமனதினாய் என்னை வணங்குகின்றான்.
20. இ∴தே பரம் அறியும் ஞானிபரன்.

## 16. தெய்வஸுர ஸம்பத விபாக யோகம்

01. அஞ்சாமை, உளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்து இருத்தல். ஈகை, பொறிகளை அடக்குதல், யாகம், சாஸ்திரம் படித்தல், தபசு, நேர்மை, தெய்வீக இயல்பு.
02. தீங்கிழையாமை, உண்மை, சினமின்மை, துறவு, அமைதி, கோள் சொல்லாமை, உயிர்களிடத்து இரக்கம், பிறர்பொருளை விரும்பாமை. மிருதுத்தன்மை, நாணம், மனத்திட்பம், தெய்வீக இயல்பு.
03. தெய்வ சம்பந்தப் பிறப்பில் தைரியம், பொறை, மன உறுதி, தூய்மை, வஞ்சமின்மை, செருக்கின்மை என்பன இயல்புகள்.
04. பகட்டு, இறுமாப்பு, தற்பெருமை, அக்ஞானம் என்பவை அசுர சம்பந்தப் பிறப்பு.
05. தெய்வ சம்பத்து மோஷசம். அசுர சம்பந்து பந்தம்.
06. உலகில் தெய்வீகப் பிறப்பு, அசுரப் பிறப்பு என இருவகைப் பிறப்புக்கள் உலகில் உண்டு.
07. நல்வினை தீவினை அறியார் அசுர இயல்பினர். அவர்களிடத்து தூய்மையும், நல்லொழுக்கமும் வாய்மையும் இல்லை.
08. அசுரர் உலகம் சத்தியம் இல்லாததென்றும், தர்மம் நிலையில்லாதது என்றும், கடவுள் இல்லாதது என்றும், ஆண் பெண் இணக்கத்தால் காமத்தைக் கொண்டது என்றும் பகர்வர்.

09. புல்லறிவாளர் ஆத்மநஷ்டமடைந்தவர்களாய், கொடுஞ்செயல் புரிபவர்களாய், உலகின் பகைவர்களாய் அழிவுக்கென்றே தோன்றியவர்கள் அசுரர்கள்.

10. பூர்த்திபண்ண முடியாத காமத்தைச் சார்ந்து ஆடம்பரமும் தற்பெருமையும் மதமும் பொருந்தியவர்களாய் சிந்தை குலைந்து தீய எண்ணங்களைக் கிரகித்துத் தீய தீர்மானங்களுடன் தொழில் புரிகின்றனர் அசுரர்கள்.

11. சாகும்வரை அளவுகடந்த கவலையை அடைந்தவர்களாய் காம நுகர்ச்சியே அனைத்திலும் மேலானதாய் மற்றொன்றுமில்லை என்று தீர்மானம் செய்தவர்களாய் அசுரர் இருப்பர்.

12. நூற்றுக்கணக்கான ஆசைக்கயிறுகளால் தளைக்கப்பட்டவர்களாய், காமக் குரோத வசப்பட்டவர்களாய், காமபோகத்தின் பொருட்டு செல்வக்குவியலைத் தேட முயலுவர் அசுரர்.

13. இன்று இது என்னால் அடையப்பட்டது. இவ்விருப்பத்தை நிறைவேற்றுவேன். இது இருக்கின்றது. மேலும் எனக்கு இச்செல்வம் வரும் என்பது அசுர எண்ணம்.

14. சத்துரு என்னால் கொல்லப்பட்டான். மற்றவர்களையும் கொல்லுவேன். நான் ஆள்பவன். போகத்தை அனுபவிப்பவன். காரியசித்தன், வலிவுடையவன், இன்புறுபவன், அசுரம்.

15. செல்வமுடையவன் உயர் குலத்தோன். எனக்கு நிகர் யாரும் இல்லை. யாகம் செய்வேன். மகிழ்வடைவேன். அக்ஞான மயக்கம் அசுரர்.

16. பல்சிந்தனைக் குழப்பம் மோக வலையில் வீழ்வு, காம போகங்களில் பற்று பாழ்நரகில் வீழ்வு.

17. தற்புகழ்ச்சியர் வணங்கமில்லாதவர்கள், செல்வச் செருக்கும் மதமும் உடையவர்கள். விதிவழுவி யாகம் செய்பவர் அசுரர்.

18. அகங்காரம், பலம் தற்பெருமை காமம், குரோதம் பற்றியவர்கள். பிரம்பப் பிரபஞ்சத்தை வெறுத்து அவமதிப்பவர் அசுரர்.

19. துவேஷமுடையவர்கள், கொடியவர்கள், கடையவர்கள், இழிந்தோர், இவர்களை பிறந்து இறந்து உழலும் உலகில் அசுரப்பிறவியிலே திரும்பத் திரும்ப நான் தள்ளுகின்றேன்.

20. மூடர்கள் பல பிறவிகளில் அசுரயோனியில் தோன்றி என்னையடையாது இன்றும் கீழான கதியினை அடைகின்றனர்.

21. நரகமானது காமம், குரோதம், லோமம் ஆகிய மூன்று வாயில்களை உடையது. இவை ஜீவாத்மாவுக்கு நாசத்தை நல்குவது. இவற்றை துறத்தல் அவசியம்.

22. மூன்று நரகவாயில் விடுதலை தனக்கு நலன்செய்து பரகதி.

23. காமவசத்தில் வினை பரிபூரணணாகான் சுகம் அடையான் முத்தி இல்லை.

24. செய்யத்தகுந்தது தகாததை நிச்சயிப்பது சாஸ்திரப் பிரமாணம். சாஸ்திர அறிவில் கர்மம் புரி.

## 17. சிரத்தாத்ரய விபாக யோகம்

01. சாஸ்திர விதிவழுவி சிரத்தையுடன் ஆராதனை சத்துவமா ரஜஸா அன்றேல் தமஸா.
02. தேகிகளுக்கு இயல்பாய் சிரத்தையானது சாத்வீகம் ராஜஸம் தாமஸம் என மூவிதம்.
03. ஒவ்வொருவனதும் மனப்பாங்குக்கு ஏற்ப சிரத்தை அமைகிறது. மனிதன் சிரத்தை மயமானவன். சிரத்தை எதுவோ அதுவே அவனுமாம்.
04. சாத்விகர்கள் தேவர்களையும் ரஜோ குணமுடையவர்கள் யக்ஷ ராக்ஷகர்களையும் தாமஸ ஜனங்கள் பிரேத பூதகணங்களையும் வணங்குகின்றனர்.
05. வீம்பும் அகங்காரமும் உடையவர்களாய், காமமும் பற்றுதலும் வலுத்தவர்களாய் அறிவற்றவர்கள் அசுரர்கள்.
06. இந்திரங்களையும் உள்ளத்தில் உறையும் என்னையும் துன்புறுத்தி சாஸ்திரத்திற்கு ஒவ்வாத கொடுந்தவம் புரிகிறார்கள் அசுரவழியில் துணிந்தவர்கள்.
07. ஒவ்வொருவர்க்கும் விருப்பமான உணவு மூவகைப்படும். யாகமும் தபசும் தானமும் அங்ஙனமே.
08. ஆயுள், அறிவு, பலம், ஆரோக்கியம், சுகம், ருசி ஆகியவற்றை வளர்ப்பவைகள் ரசமுள்ளவைகள் பசையுள்ளவைகள், வலிவு தருபவைகள், இன்பமானவைகள் ஆகிய ஆகாரங்கள் சாத்விகங்களுக்குப் பிரியம்.
09. கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, பெருவெப்பம், காரம், வறட்சி, எரிச்சல் மிகுந்தவையும் துன்பம் துயரம் நோய் உண்டு பண்ணுபவைகளுமாகிய உணவுகள் ரஜோகுணத்தவருக்குப் பிடிக்கும்.
10. யாமம் கழிந்த சுவையற்ற துர்நாற்றமெடுத்த பழைய எச்சிலான தூய்மையற்ற உணவு தமோ குணத்தாருக்கு பிரியம்.
11. ஆராதனை செய்ய மனஉறுதியோடு வினைப்பயன் விரும்பாது சாஸ்திர விதிப்படி யாகம் சாத்விகமானது.
12. பயன்விரும்பியோ ஆடம்பரத்துக்காகவோ செய்யப்படும் ஆராதனை ராஜஸம்.
13. வேதநெறி வழுவியதும் அன்னதானம் இல்லாததும் மந்திரமற்றதும் தக்ஷிணையில்லாததும் சிரத்தையற்றதுமாகிய யக்ஞம் தாமஸம்.
14. தேவர், பிராமணர், குருமார், ஞானிகள் ஆகியவர்களை போற்றுவதும் தூய்மையும் நேர்மையும் பிரம்மசரியமும் அஹிம்சையும் தேகத்தால் தவம் ஆகும்.

15. துன்புறத்தாததும் வாய்மையும் இனிமையும் நலனும் கூடிய வர்த்தை மற்றும் வேதம் ஓதுதல் வாக்குமயமான தபசு ஆகும்.
16. மனஅமைதி, அன்புடமை, மௌனம், தன்னடக்கம், தூயநோக்கம் மானஸ தபசு ஆகும்.
17. பயனை விரும்பாதவரும் யோக உறுதியற்ற நரர்களால் பெருமுயற்சியுடன் செய்யப்படும் தபசு சாத்வீகமானது.
18. பாராட்டு பெருமை போற்றுதல் என்பவற்றை முன்னிட்டு ஆடம்பரத்தோடு தவம் தற்காலிகமானது உறுதியற்றது ராஜஸம் ஆகும்.
19. மூடக்கொள்கையால் தன்னை வருத்தியே பிறரை அழித்தற் பொருட்டோ செய்யப்படும் தவம் தாமஸம் ஆகும்.
20. தக்க இடத்தில் காலத்தில் பிரதியுபகாரம் இன்றி தகுந்த பாத்திரமாய் உள்ளவர்க்குத் தானம் செய்வது சாத்வீகமானது.
21. கைமாறு கருதியோ பலனை உத்தேசித்து வழங்கப்படும் தானம் ராஜஸம்.
22. தகாத இடத்திலும், காலத்திலும் தகுதியற்றவர்களுக்கு வணக்கமின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படும் தானம் தாமஸம்.
23. "ஓம் தத் ஸத்" பிரம்மம் மூவித மொழிவு இதினின்று வேதியர் வேதம் வேள்வி பண்டுபடைக்கப்பட்டன.
24. ஆகையால் வேதமறிந்தவர்கள் வேதவிதிப்படி செய்யும் யக்ஞ தாள தபக்கிரியைகள் ஓம் என்று தொடங்குகின்றன.
25. தத் என்று பிரம்மத்தை உச்சரித்து பலன் விரும்பாது மோஷத்தை நாடுபவர்களால் நானாவித யக்ஞ தவக்கிரியைகளும் தானக் கிரியைகளும் செய்யப்படுகின்றன.
26. உண்மை, நன்மை என பொருள்படும் ஸத் மங்கள கர்மங்களில் உபயோகிக்கப்படுகின்றது.
27. வேள்வியிலும் தவத்திலும் தானத்திலும் நிலைத்திருப்பது 'ஸத்' என்று சொல்லப்படுகிறது. பிரம்மத்தின் பொருட்டுச் செய்யும் கர்மமும் 'ஸத்' என்றே இயம்பப்படுகிறது.
28. சிரத்தையின்றிச் செய்யும் யாகமும் தானமும் தபசும் மற்றக் கர்மமும் "அஸத்" எனப்படும். அது மறுமைக்கும் உதவாது, இம்மைக்கும் உதவாது.

## 18. மோக்ஷஸந்யாஸ யோகம்

01. சந்நியாசத்திற்கும் தியாகத்திற்கும் தத்துவம் யாதோ.
02. காமியகர்மங்களைத் துறத்தல் சந்நியாசம் என்பர் ஞானிகள். எல்லாக் கர்மங்களின் பயனை விடுவதைத் தியாகம் என்பர் தீர்க்கதரிசிகள்.
03. கர்மங்கள் எல்லாம் குற்றமுடையது துறத்தற்குரியது என்பர் சில அறிஞர். வேள்வி, தானம், தபசு ஆகிய கர்மங்கள் துறக்கப்படலாகாது என்பர் சில அறிஞர்.
04. தியாகம் மூன்று விதமாக பகரப்படும்.
05. யக்ஞும், தானம், தபசு ஆகிய கர்மம் விடப்படுவதன்று. அது செயற்பாலதே. யக்ஞுமும் தானமும் தவமும் அறிஞர்களுக்கு புனிதம் வழங்கப்படுபவை-களாகும்.
06. பற்றுதலையும் பயனையும் ஒழித்தே இக்கர்மங்கள் யாவும் செய்யப்பட வேண்டும் என்பது என் நிச்சயமான உத்தமமான கொள்கை.
07. நித்திய கர்மத்தினை விடுவது பொருந்தாது. மயக்கத்தில் துறப்பது தாமஸ் ஆகும்.
08. உடல் வருத்தத்துக்கு அஞ்சி கர்மத்தை துக்கமெனக்கருதி விடுகிறவன் ராஜ ஸத்தியாகம் செய்கிறான். அதனால் அவன் தியாக பலனை அடைவதில்லை.
09. பற்றுதலையும் பயனையும் விட்டு எந்த நித்தியகர்மம் செய்யப்படுகின்றதோ அத்தியாகம் சாத்விகமானது.
10. சத்வம் நிறைந்தவனும் மேதாவியும் ஐயம் அகற்றியவனும் தியாகியானவன் துன்பவினையை இகழான். இன்பவினையை விரும்பான்.
11. உடலெடுத்தவனுக்கு கர்மங்களை அறவே விடுவது இயலாது. ஆனால் வினைப்பயனைத் துறந்தவன் எவனோ அவன் தியாகி எனப்படுகிறான்.
12. இன்னாதது இனியது இரண்டும் கலந்தது என மூன்றுவித வினைப்பயன்கள் தியாகியல்லாதவர்களுக்கு விளைகிறது. தியாகிகளுக்கு ஒரு பொழுதும் இல்லை.
13. கர்மத்தின் முடிவு காட்டும் சாங்கிய சாஸ்திரத்தில் சகல கர்மங்களின் சித்திக்கென்று பகரப்பட்டுள்ள ஐந்து காரணங்களையும் என்னில் அறிந்து கொள்.
14. உடல், கர்த்தா வெவ்வேறு இந்திரியங்கள் பல்வேறு செயல்களுடன் ஐந்தாவதாகத் தெய்வமும் காரணங்களாகின்றன.
15. மெய்யால் மொழியால் மனதால் மனிதன் நியாயமாக அல்லது அநியாயமாக எக்கர்மத்தைச் செய்தாலும் இவ்வைந்துமே அதற்குக் காரணமாகும்.

16. அது அங்ஙனமிருக்க முழுமுதற் பொருளாகிய ஆத்மாவை கர்த்தாவாக காண்கின்றானோ புத்திதெளிவில் அறிவிலி மெய்காணில்.
17. அகங்காரமில்லாதவன் புத்தி பற்று வைக்காதவன் கொன்றாலும் கொல்லாதவன், பந்தப்படாதவன்.
18. கர்மத்திற்கு தூண்டுதல் அறிவு. அறியப்படுபொருள் அறிபவன். கர்மத்திற்கு இருப்பிடம் கருவி, கர்மம், கர்த்தா ஆகும்.
19. ஞானமும் கர்மமும் கர்த்தாவும் குணபேதத்தினால் மூவகை அளவைகளைக் கேள்.
20. வேறு வேறாயுள்ள பூதங்களின் வேறுபடாத அழியாத ஏகவஸ்துவை எதனால் பார்க்கிறாயோ அந்த ஞானம் சாத்வீகம் என அறிக.
21. எந்த ஞானம் எல்லா பூதங்களிலும் வெவ்வேறு விதமான பல ஜீவர்களை தனித்தனியாக அறிகிறதோ அந்த ஞானம் ராஜஸம் என அறிக.
22. ஒரு காரியத்தையே முழுதுமென்று பற்றிக்கொண்டு யுக்திக்குப் பொருந்தாததாய், உண்மைக்கு ஒவ்வாததாய் அற்பமாயுள்ளது ஞானம் தாமஸம் ஆகும்.
23. பயனில் விருப்பமில் பற்றில் விருப்பு வெறுப்பில் நியமிக்கப்பட்ட எக்கர்மம் செய்யப்படுகிறதோ அது சாத்துவீகம்.
24. ஆசை வசப்பட்டவனால் அகங்காரமுடையவனால் அதிகம் பிரயாசையுடன் எக்கர்மம் செய்யப்படுகிறதோ அதுவே ராஜஸம்.
25. வினையின் விளைவையும் நஸ்டத்தையும் துன்பத்தையும் தன் வல்லமையையும் எண்ணிப் பாராது மோகத்தால் எக்கர்மம் ஆரம்பிக்கப்படுகிறதோ அது தாமஸம் ஆகும்.
26. பற்று நீங்கியவன் அகங்காரமற்றவன் உறுதியும் ஊக்கமுமுடையவன் வெற்றி தோல்வியில் வேறுபடாதவன் கர்த்தா சாத்வீகன்.
27. ஆசையுள்ளவன் வினைப்பயனை விரும்புபவன் உலுத்தன், துன்புறுத்தும் தன்மையன் சுத்தமில்லாதவன் மகிழ்வும் சோர்வும் கொள்பவன் கர்த்தா ராஜஸன்.
28. யோகத்துக்கு ஒவ்வாதமனமுடையவன் அறிவு வளரப் பெறாதவன், முரடன், வஞ்சகன், பழிகாரன், சோம்பேறி, துயருறுவோன், காலம் நீடிப்பவன், கர்த்தா தாமஸன்.
29. அறிவினுடையவும் மன உறுதியினுடையவும் மூவகை பேதத்தை தனித்துப் பகரக்கேள்.
30. பிரவிருத்தியையும் நிவிருக்தியையும் செய்யத் தகுந்ததையும் தகாததையும் பயத்தையும் பயமின்மையையும் பந்தத்தையும் மோக்ஷத்தையும் அறியும் புத்தி சாத்விகமானது.

31. தர்மத்தையும் அதர்மத்தையும் தகுந்த காரியத்தையும் தகாத காரியத்தையும் உள்ளபடியல்லாது அறிகிறது ராஜஸம்.
32. அக்ஞான இருளால் மூடப்பட்ட அறிவு அதர்மத்தை தர்மமாகவும், பொருள்களை எல்லாம் விபரீதமாகவும் நினைப்பது தாமஸம்.
33. பிறழாமனதால் உறுதியுடன் மனம் பிராணன், இந்திரியங்களில் கிரியைகள் காக்கின்றவனது உறுதி சாத்வீகமானது.
34. எந்த உறுதியினால் அறம், பொருள், இன்பங்களை ஒருவன் காக்கின்றானோ பற்றுதலால் பயனை விரும்புகின்றானோ அந்த உறுதி ராஜஸம்.
35. தூக்கத்தையும், அச்சத்தையும் துயரத்தையும் மனக்கலக்கத்தையும் செருக்கையும் விடாதுபிடிக்கும் அறிவிலியின் உறுதியோ தாமஸம்.
36. எச்சுகத்தையும் பயிற்சியால் துய்த்துத் துன்பத்தின் முடிவையடைகிறானோ அதன் மூவிதப் பாரப்பாட்டை என்னிடம் கேளாய்.
37. முதலில் விஷம் போலவும் முடிவில் அமிர்தத்திற்கு ஒப்பானது சாத்துவிகசுகம். ஆத்ம நிஷ்டையில் தெளிவடைந்த புத்தியில் அது தோன்றுகின்றது.
38. முதலில் அமிர்தம் போலவும் முடிவில் விஷம்போலவும் அமைவது ராஜஸசுகம் ஆகும்.
39. தொடக்கத்திலும் முடிவிலும் தனக்கு மயக்குவதால் தூக்கம், சோம்பல், தடுமாற்றத்தில் இருந்து பெறப்படும் சுகம் தாமஸம் ஆகும்.
40. இயற்கையினின்று உதித்த இம் முக்குணங்களினின்று விடுதலையடைந்த உயிர் மண்ணுலகில் அல்லது விண்ணுலகில் தேவர்களுக்கிடையிலே இல்லை.
41. பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுடைய கர்மங்கள் அவரவர் இயல்பில் உதித்த குணங்களுக்கு ஏற்பப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.
42. அகக்கரணங்களை அடக்குதல், புறக்கரணங்களை அடக்குதல், தவம், தூய்மை, பொறுமை, நேர்மை சாஸ்திர ஞானம், சுபானுபவ ஞானம், ஈசுவர நம்பிக்கை இவை யாவும் இயல்பாயுண்டாகிய பிராம்மண கர்மங்களாகும்.
43. சூரத்தன்மை, துணிவு, உறுதி, சாதுர்யம், போரில் புறங்காட்டாமை, கொடை, இறைமை ஆகியவைகள் இயற்கையில் உண்டாகிய க்ஷத்திரிய கர்மங்களாகும்.
44. உழவு, கால் நடைகாத்தல் வணிகம் வைசிக கர்மங்களாம். இட்ட பணியாற்றுவது சூத்திரனுக்கு இயல்பான கர்மம்.
45. தத்தம் கர்மத்தில் களிப்புறும் மனிதன் நிறைநிலை எய்துகிறான். தன் கர்மத்தின் கருத்து வைப்பவன் எப்படி பரிபூரணத் தன்மையை அடைகிறான் என்பதனைக் கேள்.

46. யாரிடத்தில் இருந்து உயிர்கள் உற்பத்தியாயினவோ யாரால் இவ்வையகம் பியாபிக்கப்பட்டுள்ளதோ அவ் ஈசுவரனை சுயகர்மத்தால் வணங்கி மனிதன் மேன்மையுறுகிறான்.
47. நிறைவாயனுஸ்டிக்கும் பரதர்மத்தைவிடக் குறைவாயனுஸ்டிக்கும் ஸ்வதர்மம் சிறந்தது. சுபாவத்தில் அமைந்த கர்மத்தைச் செய்பவன் கேடு அடைவான்.
48. கேடுடையதெனினும் உடன் பிறந்த கன்மத்தை விட்டுவிட முடியாது. புகைசூழ் அக்கினிபோல் தோஷசம்சூழ் கர்மங்கள்.
49. பற்றற்றபுத்தி சிந்தையடக்கம் ஆசையற்ற சந்நியாசம் மேலான நைஷ்கர்மய சித்தி.
50. சித்தியுற்றவன் ஞானத்தின் மேலாம் வடிவாகிய பிரம்மத்தை அடைவதை அறி.
51. தூய அறிவு உறுதியுடன் உடலையும் உள்ளத்தையும் அடக்கி சப்தம் முதலிய இந்திரிய விஷயங்களை துறந்தும் ராகது வேஷத்தை விட்டொழித்தல்.
52. தனித்திருத்தல் உண்டிசுருக்கி மனம் மொழி மெய்யடக்கி யாண்டும் தியான யோகத்தில் திளைக்கும் வைராக்கியத்தை அடைதல்.
53. அகங்காரம், வன்மை, செருக்கு, காமம், குரோதம், உடமை ஆகியவைகளை நீத்து மமகாரமற்று சாந்தமாயிருப்பவன் பிரம்மாவதற்குத் தகுதி.
54. பிரம்மஞான உறுதி பெற்ற தெளிந்த ஆத்மா துயருறுவதில்லை, அவாவுறுவதில்லை. எல்லா உயிர்களிடத்தும் சமனாயிருப்பவன் என்மீது மேலாம் பக்தி பெறுகிறான்.
55. பக்தியினால் என்தன்மை அறிந்து உள்ளபடி அறிந்து என்னையடைகிறான்.
56. எப்பொழுதும் எல்லாக்கர்மங்களைச் செய்தபோதும் என்சரண் என் அருள் நித்தியநிலை பேற்றுப்பதம்.
57. விவேகத்தால் எல்லாக் கர்மங்களையும் என்னிடத்து சமர்ப்பித்து என்னை நினைத்து புத்தியோகம் சார்ந்து யாண்டும் சித்தத்தை என்பால் வைப்பாயாக.
58. சித்தம் என்பால் என் அருள் தடைகள் தாண்டும் அன்றேல் அகங்காரத்தால் கேளாவிடின் கேடு.
59. அகங்காரத்துடன் போர்புரிய நினைத்தல் துணிவு வீண் உன் இயல்பு பிணித்திழுக்கும்.
60. மயக்கத்தால் இச்சமில்லாதது உன் இயல்பில் பிறந்த வினையினால் கட்டுண்டு உன் வசமில்லாதவனாய் அதையே செய்வாய்.
61. ஈசுவரன் மாயையினால் யந்திரத்திலேந்திய எல்லா உயிர்களையும் ஆட்டிக்கொண்டு எல்லா உயிர்களுடைய இருதயத்தில் நிற்கின்றான்.

62. எல்லாப்பாங்கிலும் ஈசுவரன் சரண். அவனருள் மேலாம் சாந்தியையும் நிலைப்பதவியையும் அடைவாய்.
63. மறைபொருளுக்கு எல்லாம் மறைபொருள் இயம்பப்பட்டுள்ளது இதை முழுதும் ஆராய்ந்து விரும்பியதைச் செய்.
64. அனைத்திலும் ஆழ்ந்த மேலாம் மொழியைத் திரும்பவும் கேள். நீ என் திடமான இஸ்டனாய் இருப்பதனால் உனக்கு நலத்தை நவிலுகிறேன்.
65. என்னிடம் மனம் வைத்து பக்தி வைத்து ஆராதித்து என்னை நமஸ்காரம் செய்து என்னையே அடைவாய். நான் உனக்கு உண்மையா பிரதிக்ஞை செய்கிறேன். நீ என் பிரியம்.
66. தர்மம் பரித்தியாகம் என் சரண் பாவங்களில் இருந்து விடுதலை வருந்தாதே.
67. தவமிலன் பக்தியிலன் தொண்டு செய்திலன் என்னை நிந்திப்பவன் மேல் இக் கோட்பாட்டை நீ இயம்பாதே.
68. மிக ஆழ்ந்த இத்தத்துவத்தை என் பக்தர்களிடமிருந்து போதித்து என்னிடம் பக்தி பண்ணுகிறவன் ஐயமின்றி என்னையே அடைவான்.
69. மாந்தருள் எனக்கு விருப்பமான செயல்புரிபவனைவிட யாரும் இல்லை. எனக்கினியவனும் வையகத்தில் அவனைவிட யாரும் இல்லை.
70. தர்மம் நிறைந்த நமது இச்சம்பாஷனையை இன்னும் யார் கற்றறிகிறானோ அவனால் நான் ஞான யக்ஞுத்தால் ஆராதிக்கப் பெற்றவன் ஆவேன் இது என் கொள்கை.
71. சிரத்தையுடையவனாயும் அவமதிக்காது இதனைக் கேட்கும் மனிதனும் விடுதலையுற்று நல்வினையாளர் எய்தும் நல்லுலகங்களை அடைவான்.
72. ஒரு மனதுடன் கேட்கப்பட்டாயின் அறியாமை அழியும்.
73. மயக்கம் அழிந்து அருளால் தெளிவடைந்து உறுதியாக உமது சொற்படி செய்வேன்.
74. வாசுதேவர்க்கும் பார்த்தனுக்கும் நிகழ்ந்த பேருவைமிகு அற்புத சம்பாஷனையை ஸஞ்ஜயன் கேட்க முடிந்தது.
75. வியாசர் அருளால் மேலாம் ஆழ்ந்த யோகத்தை யோகேசுவரனாகிய கிருஷ்ணனிடத்து நேரே கேட்க முடிந்தது.
76. கேசவர்ஜுனரின் புண்ணியமும் அற்புதமான சம்வாதத்தை நினைந்து நினைந்து மகிழ்வு.
77. ஹரியின் அற்புதவடிவத்தை எண்ணியெண்ணி எனக்கு இன்னும் பெருவியப்பு உண்டாகிறது மேலும் களிப்படைகிறேன்.
78. யோகேசுவரனாகிய கிருஸ்ணனும் தனுசைத்தாங்கிய பார்த்தனும் அங்கு திருவும் வெற்றியும் பெருக்கும் நிலைத்த நீதியும் உனது என்பது என் கொள்கை.